


**03. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் இணைந்து செயலாற்ற ஃபிரான்ஸ் நாட்டின் வர்த்தகர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அழைப்பு விடுத்துள்ளார்.

2. தமிழக நிதிநிலை அறிக்கை தொடர்பாக முதலமைச்சர் திரு. விஜய் ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

3. தமிழ்நாட்டில் இளங்கலை வேளாண் பாட பிரிவில் மாணாக்கர் சேர்க்கைக்கான தர வரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

4. தமிழக திருக்கோவில்களில் முறைகேடுகள் தொடர்பாக, ஆதாரத்துடன் பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

5. தமிழக இளைஞர்கள் தமிழ்நாட்டிலேயே தொழில் புரிவதற்கான நடவடிக்கைகளை அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா கூறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

நிர்மலா சீதாராமன்

இந்தியா - ஃபிரான்ஸ் இடையிலான நட்புறவு, திறன் வளர்ச்சி மற்றும் நீடித்த நிலைத்தன்மைக்கான அடுத்தக்கட்ட மேம்பாட்டிற்கு வழிகோலும் என்று மத்திய நிதித்துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பாரீசில் இந்தியா - ஃபிரான்ஸ் வர்த்தக வட்ட மேஜை கூட்டத்தில் உரையாற்றிய அவர், வேகமான மாற்றங்களை உலகளாவிய பொருளாதாரம், சந்தித்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

ஃபிரான்ஸ் நாட்டின் வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும், இந்தியாவுடன் இணைந்து வளர்ச்சி அடைந்த பாரத பாதையில் செயலாற்ற அவர் அழைப்பு விடுத்தார்.

மின்னணு பொருளாதாரத்தின் முன்னோடி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று கூறிய அவர், சர்வதேச டிஜிட்டல் பரிவர்த்தனையில் இந்தியாவின் பங்களிப்பு பாதி அளவிற்கு உள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

வங்கி வாய்ப்புகள், நிதி மேலாண்மை, குத்தகை, சர்வதேச திறன் மேம்பாட்டு மையங்கள், மறு காப்பீடு, நிலையான நிதி வளர்ச்சி, போன்றவற்றில் சர்வதேச நிதி சேவைகள் ஆணையம், வாய்ப்புகளை விரிவுபடுத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

***********

அமர்நாத்

வருடாந்திர அமர்நாத் யாத்திரை ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் மற்றும் பல்தால் வழிதடங்களில் இன்றுகாலை தொடங்கியது.

57 நாட்கள் நடைபெறும் இந்த புனித யாத்திரையில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கின்றனர்.

3 ஆயிரத்து 888 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் பனிலிங்க குகைக்கு பக்தர்கள் ஆண்டுதோறும்

பயணித்து பனி வடிவிலான சிவலிங்கத்தை தரிசித்து வருவது வழக்கமாகும்.

அடுத்த மாதம் 28ஆம் தேதிவரை அமர்நாத் யாத்திரை நடைபெறும்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன்

பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் யாத்திரிகர்களின் பாதுகாப்பான பயணத்திற்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

***********

ரக்சா கட்சே

நாட்டின் முன்னனி தொழிற்சாலைகளையும், கூட்டமைப்புகளையும், my bharath தளத்துடன் இணைத்து, திறன் கட்டமைப்பை முன்னெடுத்து செல்வதே அரசின் நோக்கம் என்று மத்திய இளைஞர் விவகாரத்துறை இணை அமைச்சர் திருமதி ரக்சா கட்சே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் mybharath சார்ந்த தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், இதன்மூலம் நாட்டின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் கிராமங்கள் தோறும், திறன் வளர்ச்சி, தொழில் பயிற்றுவித்தல், பாரிட்சார்த்த முயற்சிகள் தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு வழிகோலப்படும் என்றார்.

இளையோர் தொழிற்கூட்டமைப்புடனும், தொழிற்சாலைகளுடனும் எவ்வாறு இணைந்து பணியாற்றுகிறார்கள் என்பதை அமைச்சகம் ஆய்வு செய்யும் என்றும் குறிப்பிட்டார்.

இதன்மூலம் இளையோருக்கான தொழில் வாய்ப்புகள் அதிகாரிப்பதோடு, அவர்களிடமிருந்து தேச கட்டமைப்பிற்கான பங்களிப்பு ஊக்குவிக்கப்பட்டு ஆளுமை உறுதி செய்யப்படும் என்றார்.

***********

<u>முதலமைச்சர்</u>

தமிழக நிதிநிலை அறிக்கை தொடர்பாக முதலமைச்சர் திரு.விஜய் ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகளுடன் சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகத்தில் நடப்பு நிதியாண்டிற்கான த.வெ.க அரசின் நிதிநிலை அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், துறை ரீதியான ஆலோசனைகளை முதலமைச்சர் நேற்று தொடங்கினார்.

முதற்கட்டமாக கூட்டுறவு மற்றும் உணவு துறை சார்ந்த ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் இன்று ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை துறையின் உயர் அதிகாரிகளுடன் பட்ஜெட் சார்ந்த அம்சங்கள் குறித்து முதலமைச்சர் கலந்துரையாடினார்.

வரும் 22ஆம் தேதி வரை பல்வேறு துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் தொடர் ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

***********

<u>சம்பத் குமார்</u>

தமிழ்நாட்டில் சமூக விடுதிகளில் மாணாக்கரின் தேவைகளை அரசு முன்னுரிமையுடன் நிறைவேற்றும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. சம்பத் குமார் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மாநிலம் முழுவதும் சமூக விடுதிகளில் உணவின் தரம், படிப்பதற்கான சூழல் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார்.

வாய்ஸ்

***********

வினோத்

தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்தில் 2026-27ஆம் கல்வியாண்டிற்கான இளங்கலை மாணாக்கர் சேர்க்கை தரவரிசை பட்டியலை மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தஞ்சாவூரில் இன்று வெளியிட்டார்.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலை சேர்ந்த மாணவி மெர்லினும்,

ஈரோடு மாணவர் மாதவராஜனும் தலா 200 மதிப்பெண்களுடன் தரவரிசை பட்டியலில் முதல் இடத்தை பகிர்ந்துள்ளனர்.

நடப்பு கல்வியாண்டில் வேளாண் துறையில் 14 பாடபிரிவுகளில் சேர்க்கைக்காக மொத்தம் 26 ஆயிரத்து 709 விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில் 24 ஆயிரத்து 435 மாணாக்கர் தகுதி பெற்றுள்ளனர்.

***********

ரமேஷ்

தமிழக திருக்கோவில்களில் முறைகேடுகள் தொடர்பாக, ஆதாரத்துடன் பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

அறநிலையத்துறை கோவில் திருப்பணிகளில் முறைகேடு, வேலை வாய்ப்பிற்கு லஞ்சம் போன்ற குற்றங்கள் குறித்து minister_hrce@tn.gov.in இணையதளம் வாயிலாக தெரிவிக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்புகார்கள் மீது நேரடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

***********

கீர்த்தனா

தமிழக இளைஞர்கள் அண்டை மாநிலங்களுக்கு செல்லாமல் நம் மாநிலத்திலேயே தொழில் புரிவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

கோவையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் தென்னிந்திய மண்டல ஆலோசனை கூட்டத்தில் பேசிய அவர், தொழில் துறையினருக்கான அடிப்படை தேவைகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மையுடன் இருப்பது உறுதி செய்யப்படும் என்றார்.

***********

நிர்மல் குமார்

மதுரையில் எரிசக்தி துறை அமைச்சர் திரு. C T R நிர்மல் குமார் உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.பி.விஸ்வநாதன் தலைமையில் இன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

கண்காணிப்பு குழுவின் தலைவர் திரு.சு.வெங்கடேசன் இதில் பங்கேற்றார்.

மதுரை மாவட்டத்தில் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து இந்த கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

***********

காந்திராஜ்

கூட்டுறவு வார விழாவை ஒட்டி மாநில அளவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.காந்திராஜ் சென்னையில் இன்று விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு கடனுதவிகளும் வழங்கப்பட்டன.

***********

அனிதா ராதாகிருஷ்ணன்

தமிழக முதலமைச்சரை அவதூறாக பேசியதாக கூறப்படும் வழக்கில் முன்னாள் அமைச்சரும் திருச்செந்தூர் தொகுதி சட்டமன்ற திமுக உறுப்பினருமான திரு. அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறையினர் இன்று கைது செய்தனர்.

அவர் மீது 3 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக இவ்வழக்கு தொடர்பாக முன்ஜாமீன் கோரி திரு. அனிதா ராதாகிருஷ்ணன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது.

இதனையடுத்து ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டிருந்த திரு.அனிதா ராதாகிருஷ்ணனை தூத்துக்குடி மாவட்ட கூடுதல் கண்காணிப்பாளர் தலைமையில் ஆத்தூர் காவல்துறையினர் கைது செய்தனர்.

இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதனிடையே அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டதற்கு திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

***********

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய கால்நடை நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் சிறப்பு தடுப்பூசி முகாம்கள் வரும் ஆகஸ்ட் 10ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

ஈரோடு

ஈரோடு பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதகுகளில் பராமரிப்பு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

திருவாரூர்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே பாமனி கிராமத்தில் 9 உலோக சிலைகள் கண்டுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெண்களுக்கான வழிகாட்டு மையத்தில் தொகுப்பூதிய அடிப்படையில் காலி பணியிடத்திற்கு தகுதி வாய்ந்தோர் வரும் 10ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

***********

டென்னிஸ்

ருமேனியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் விஜய் சுந்தர் பிரசாந்த், ராம்குமார் ராமநாதன் இணை – ஆஸ்திரியா, செக்குடியரசு இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********